02.02.16

தினமணி

# இன்றைய வேளாண் செய்திகள்

## டாடா காபி: நிகர லாபம் 66% அதிகரிப்பு

டாடா காபி நிறுவனம் நடப்பு நிதி ஆண்டின் டிசம்பருடன் முடிவடைந்த மூன்றாவது காலாண்டில் ரூ.30.5 கோடியை நிகர லாபமாக ஈட்டியது.

இதுகுறித்து அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

டாடா காபி நிறுவனம், நடப்பு 2015-16-ஆம் நிதி ஆண்டின் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான மூன்றாவது காலாண்டில் ரூ.439.4 கோடியை வருவாயாக ஈட்டியது. கடந்த நிதி ஆண்டின் இதே கால அளவில் வருவாய் ரூ.403 கோடியாக இருந்தது. நிறுவனத்தின் வருவாய் 9 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது.

இதே கால அளவில் நிறுவனத்தின் செலவினம் ரூ.369 கோடியிலிருந்து ரூ.383.5 கோடியாக உயர்ந்தது.

நிகர லாபம் 66 சதவீதம் அதிகரித்து ரூ.30.5 கோடியாக உள்ளது. இது, கடந்த நிதி ஆண்டின் இதே கால அளவில் ரூ.18.3 கோடியாக இருந்தது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீர்ப் பாசன பராமரிப்பு பயிற்சி

ராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ். மங்கலம் அருகே தண்ணீர் பாசன பராமரிப்பு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

வரவணி கிராமத்தில் ஆர். எஸ். மங்கலம் வட்டார வேளாண்மைத் துறை சார்பில் மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் இப்பயிற்சி அளிக்கப்பட்டது. இம்முகாமிற்கு ஊராட்சி மன்றத் தலைவர் விஜயராணி, ஒன்றிய கவுன்சிலர் மணிமாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை உதவி இயக்குநர் மோகன்ராஜ், வேளாண் திட்டங்கள் பற்றி பேசினார். தொழில் நுட்ப மேலாண்மை பிரிவு வேளாண்மை அலுவலர் உலகுசுந்தரம், நுண்ணீர்ப் பாசன பராமரிப்பு முறைகளின் முக்கியத்துவம் பற்றி பேசினார்.

இளநிலை பொறியாளர் பழனிவேல், நுண்ணீர்ப் பாசன பாரமரிப்பு, நவீன இயந்திரங்கள் மற்றும் வேளாண் பொறியியல் துறையில் உள்ள மானிய திட்டங்களான பண்ணை குட்டைகள், கதிர் அறுவடை இயந்திரம், நிலம் சமப்படுத்தும் கருவி, ஆகியவைகளை பற்றி எடுத்துரைத்தார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர் முருகானந்தம் மற்றும் ராம்குமார் ஆகியோர் செய்திருந்தனர். வட்டார தொழில் நுட்ப மேலாளர் தனலெட்சுமி நன்றி கூறினார்.

## நீலகிரி வனப் பகுதிகளில் நீர்ப்பிடிப்பு, மண் வள மேலாண்மை பயிற்சி முகாம் துவக்கம்

நீலகிரி மாவட்டத்தில் வனப் பகுதிகளிலுள்ள நீர்ப்பிரிவு முகடுப் பகுதிகளில் நீர்ப்பிடிப்பு மற்றும் மண் வள மேலாண்மை குறித்த 12 நாள்கள் பயிற்சி முகாம் உதகையில் திங்கள்கிழமை தொடங்கியது.

கோவையிலுள்ள மாநில வனப் பணியாளர்களுக்கான மத்திய உயர்

பயிற்சியகத்தால் வழங்கப்படும் இப்பயிற்சி முகாமில் கேரளம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களைச் சேர்ந்த 34 பயிற்சியாளர்கள் பங்கேற்றுள்ளனர். இவர்களுக்கு, நீர்ப்பிரிவு முகடுப் பகுதி மேலாண்மைத் திட்டத்தை செயல்படுத்து குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பதே இதன் நோக்கமாகும்.

இதில், மண் பாதுகாப்பு, கட்டமைப்பு, வடிகால், ஓடைகள் பராமரிப்பு, மழைநீர் சேமிப்பு மற்றும் கழிவுநீர் கட்டமைப்பு போன்றவற்றிற்கான இடங்களைத் தேர்வு செய்தல், வடிவமைத்தல் போன்றவை குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், செயல்முறை விளக்கம், களப் பயிற்சி, இது தொடர்பான வடிவமைப்பு, செலவுகளை மதிப்பீடு செய்தல், திட்ட அறிக்கை தயார் செய்தல் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி பெறும் உதவி வனப் பாதுகாவலர்கள் குருத்துக்குளி, நஞ்சநாடு கிராமங்களிலுள்ள நீர்ப்பிரிவு முகடுப் பகுதிகளில் களப் பயிற்சியையும் மேற்கொள்வதோடு, நீர்ப்பிரிவு முகடுப் பகுதி மேம்பாட்டிற்கான மாதிரித் திட்ட அறிக்கையையும் தயார் செய்கின்றனர்.

இப்பயிற்சி முகாமை உதகையிலுள்ள மத்திய மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு மையத்தில் திங்கள்கிழமை தொடங்கி வைத்த மலைப் பகுதி மேம்பாட்டுத்திட்ட இயக்குநர் ஸ்ரீனிவாச ரெட்டியுடன், மாநில வனப் பணியாளர்களுக்கான மத்திய உயர் பயிற்சி மையத்தின் பயிற்றுநர் இளங்கோ, மாவட்ட வன அலுவலர் பத்ரசாமி ஆகியோரும் பங்கேற்றனர். மத்திய மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் ஓ.பி.எஸ்.சிங் கோலா தலைமையேற்ற இந்நிகழ்ச்சியில் மையத்தின் முதன்மை விஞ்ஞானி மணிவண்ணன் இப்பயிற்சியின் நோக்கம் குறித்து விளக்கினார்.

## எளிய முறையில் மாட்டுத் தீவனப் பயிர் வளர்க்கும் ஓமலூர் வேளாண் பட்டதாரி

எளிமையான முறையில் கறவை மாடுகளுக்கு தீவனப் பயிர் வளர்த்து ஓமலூரைச் சேர்ந்த வேளாண் பட்டதாரி வெற்றி கண்டுள்ளார்.

சேலம் மாவட்டம், ஓமலூர் அருகேயுள்ள இந்திரா நகர் பகுதியைச் சேர்ந்தவர் சுப்பிரமணி மகன் தினகரன் (30). வேளாண் பட்டதாரியான இவர், அந்த பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் உற்பத்தி குறித்த ஆலோசனைகளை வழங்கி வருகிறார்.

கிராமப் பகுதிகளில் மாடுகள் வளர்ப்பதை போலவே, நகர் பகுதிகளிலும் கறவை மாடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. கிராமப் பகுதிகளில் மேய்ச்சல் நிலங்கள் அதிகமாக இருப்பதால், கிராமவாசிகள் தீவனத்துக்கு சிரமமில்லை. இருப்பினும், மழை இல்லாத காலங்களில் மாடுகளுக்கு தீவனத்தை விலைக்கு வாங்கியே கொடுக்கும் நிலை ஏற்படுகிறது. இதுபோன்ற நிலையைச் சமாளிக்கும் வகையில், வேளாண் பட்டதாரி தினகரன் தீவனப் பயிர் வளர்க்கும் எளிமையான முறையைக் கண்டுபிடித்துள்ளார். இதற்கு வீட்டில் ஏழு அடுக்குகள் கொண்ட ரேக் ஒன்றும், பிளாஸ்டிக் பிளேட்களும் தேவை. இந்த பிளேட்டில் நாம் மாட்டுக்கு கொடுக்க விரும்பும் பயிரை தீவனமாக வளர்க்க முடியும். இவர் இதன் மூலம் மக்காச்சோளப் பயிரை வளர்த்துள்ளார்.

இதுகுறித்து தினகரன் கூறியது: சுமார் ஒரு கிலோ மக்காச்சோள விதையை நன்றாக தண்ணீரில் ஊறவைக்க வேண்டும். பின்னர் அதை எடுத்து ஐந்தாகப் பிரித்து, ஐந்து பிளாஸ்டிக் பிளேட்களில் பரப்பி அதன்மீது ஈரமான துணியைப் போட வேண்டும். இந்த விதைகள் முளைக்க ஆரம்பித்து நன்றாக வளரும். அதன் வளர்ச்சி அடுத்தடுத்து வரும்போது, வேறு ரேக்குக்கு அந்த பிளேட்களை மாற்ற வேண்டும். இவ்வாறு செய்யும்போது, ஏழாவது நாளில் இந்த பயிர் மாடுகள் உண்ணும் அளவுக்கு சுமார் ஓர் அடி உயரத்துக்கும் மேலாக வளர்ந்து விடும். ஏழாவது அல்லது பத்தாவது நாள் வரைகூட வளர்த்து அந்த பயிரை அப்படியே முழுமையாக மாடுகளுக்கு தீவனமாகக்

கொடுக்கலாம். அந்த அளவுக்கு நல்ல முறையில் பசுமையாகவும், அதன் தன்மை மாறாமலும் வளர்ந்து விடும்.

இதற்கு மண், உரம் எதுவும் தேவையில்லை. மேலும், இட வசதியும் அதிகமாக தேவையில்லை. குறைந்த அளவிலான இடத்திலேயே அதிக அளவிலான தீவனப் பயிர்களை வளர்க்க முடியும். இந்த முறையில் வளரும் விதையானது, வளர்ந்து பயிரானதும் அப்படியே வேருடன் மாடுகளுக்கு உணவாகக் கொடுக்கலாம். இதனால், மாடுகளுக்குத் தேவையான அனைத்து வகையான சத்துகளும் முழுமையாகக் கிடைப்பதால், மாடுகள் வழக்கத்தை விட அதிகமான பால் தரும். மேலும், இதேபோன்று ராகி, கம்பு, கொள்ளு, அவரை போன்ற பயிர்களையும் மாடுகளுக்குத் தீவனமாக வளர்த்துக் கொடுக்கலாம். இது எளிமையான தீவன வளர்ப்பு முறையாகும் என்றார். வேளாண் துறை அதிகாரிகள் வாய்ப்பு கொடுத்தால், இதுபோன்ற ஆலோசனைகள் மற்றும் பயிற்சியை விவசாயிகளுக்கு இலவசமாக செய்யவும், வேளாண்மை ஆலோசனைகள் வழங்கவும் தயாராக இருப்பதாக தினகரன் தெரிவித்தார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கொள்முதல் நிலையம் துவக்கம்

சென்னிமலை: சென்னிமலை அருகே வெப்பிலி பிரிவில், நேரடி கொள்முதல் நிலையம் தொடங்கப்பட்டது. பசுவட்டி கிராம பஞ்சாயத்து மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் தற்போது நெல் அறுவடை தொடங்கியுள்ளது. நெல்லை நேரடியாக கொள்முதல் செய்யும் வகையில், இந்த நிலையம் தொடங்கப்பட்டது. இதில் நெல்லை விற்பனை செய்வதால் உரிய விலை கிடைப்பதுடன், பணமும் தாமதமின்றி

கிடைப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். கொள்முதல் நிலையம் அமைக்க உத்தரவிட்ட கலெக்டர் பிரபாகர், மாவட்ட வருவாய் அதிகாரி சதீஸ் ஆகியோருக்கு விவசாயிகள் நன்றி தெரிவித்தனர்.

## கால்நடை வளர்ப்பு பயிற்சி: பல்கலை சார்பில் அழைப்பு

ஈரோடு: ஈரோட்டில் கால்நடை வளர்ப்பு இலவச பயிற்சி வகுப்பு நடக்கிறது. சி.என்.சி., கல்லூரி அருகேயுள்ள கால்நடை மருத்துவ பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் பிப்., மற்றும் மார்ச் மாதங்களில் நடக்கிறது. இதில் செம்மறியாடு, வெள்ளாடு வளர்ப்புக்கு, பிப்., 17, 18, 19 ஆகிய தேதிகளிலும், கறவை மாட்டு வளர்ப்புக்கு, 24, 25, 26 ஆகிய தேதிகளிலும், நாட்டுக்கோழி வளர்ப்புக்கு, மார்ச் மாதம், 2, 3, 4 ஆகிய நாட்களிலும் நடக்கிறது. விருப்பம் உள்ளவர்கள், நேரில் அல்லது அலுவலக தொலைபேசி எண், 0424-2291482ல் தொடர்பு கொள்ளலாம். இதில், 30 பேர் மட்டுமே பங்கேற்க முடியும். எனவே முன்பதிவு அவசியம். இதை கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் யசோதை தெரிவித்துள்ளார்.

## மாநில மரத்தின் மகத்துவம்

மாநில மரமான பனை நமக்கு நிழல் தருவதில்லை. ஆனால் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முக்கியப்பங்கு வகிக்கின்றன. ஏரி, கண்மாய் போன்றவற்றின் கரைகளில் நடப்பட்ட பனை மரங்கள் அவற்றை பலப்படுத்தின. பனை மரங்கள் தனது வேர்களின் மூலமாக அதிக அளவு மழைநீரை பூமிக்கு கீழே அனுப்பி நிலத்தடி நீர் வளத்தை அதிகரித்தன. கடலோர பனைமரங்கள் புயல்காற்றைத் தடுக்கும் இயல்புடையன. பல்வேறு நோக்கங்களுடன் நடப்பட்ட பனைமரங்கள் இன்று செங்கல் சூளைகளுக்கு எரிபொருளாக மட்டுமே பயன்படுகின்றன. புயல், வெள்ளச்சேதம் முன்பை விட அதிகரிக்க பனை மரங்களின் எண்ணிக்கை குறைந்ததும் ஒரு காரணம்.

## விவசாயிகளுக்கு பயிற்சி

செஞ்சி: செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் நவீன கரும்பு சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு மூன்று நாள் பயிற்சி நடந்தது.

செஞ்சி தாலுகா, செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் கரும்பு விவசாயிகளுக்கு, மூன்று நாள் பயிற்சி நடந்தது. துணை பொது மேலாளர் விஜயகுமார் முகாமை துவக்கி வைத்தார். விரிவாக்க மேலாளர் வெங்கடேச பெருமாள் முன்னிலை வகித்தார். விவசாய பயிற்சி அலுவலர் வித்யா, பூச்சியியல் வல்லுநர் கார்த்திக், விரிவாக்க அலுவலர் சதிஷ் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

இதில், விவசாயிகளுக்கு கள பயிற்சியும், விளக்கமும் அளித்தனர். விதை கரும்பின் முக்கியத்துவம், சொட்டு நீர்பாசனம், நிழல் வலை மூலம் செதில் பரு நாற்று நடவு, இயற்கை இடு பொருட்கள் உபயோகித்தல், கட்டை கரும்பு சாகுபடி, பூச்சியியல் மேலாண்மை மற்றும் களை கட்டுப்பாடு குறித்து பயிற்சி அளித்தனர்.

## கால்நடை தீவன சந்தை அமைக்க விவசாயிகள் கோரிக்கை

க.பரமத்தி: கரூர் மாவட்டத்தில் க.பரமத்தியில், பிரதான தொழிலாக விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு உள்ளது. இதனால், தீவன பயிர்களான கம்பு ஒட்டுப்புல், கினியா புல், கொழுக்கடடைப்புல், மற்றும் பயறு வகையில் வேலிமால், குதிரைமசால், முயல்மசால், தீவன கட்டைபயிர் போன்றவை அதிகளவில் பயிரிடப்படுகிறது. எனவே கால்நடைகளை விற்பனை செய்ய சந்தைகள் இருப்பதை போன்றே கால்நடை தீவனங்களை தயாரிக்கும் விவசாயிகளுக்கு ஏதுவாக தீவன சந்தை அமைக்க வேண்டும் கோரிக்கை வைக்கின்றனர்.

## பசுமை பாதுகாப்பகம் கருத்தரங்கு

ஒமலூர்: ஒமலூரில் பசுமை பாதுகாப்பகம் சார்பில், மனித வள சுற்று சூழல் மேம்பாட்டு கருத்தரங்கம் மற்றும் மரக்கன்றுகள் நடும் விழா நடந்தது. பள்ளி மாணவ, மாணவியர், பெண்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர் பலர் கலந்து கொண்டனர். கருத்தரங்கில் பூகம்பம், மண் சரிவு, வெள்ளம், சுனாமி, வைரஸ் கிருமி தாக்குதல் என இயற்கை சீற்றங்களை எவ்வாறு எதிர் கொள்ள நாம் நம்மை தயார் படுத்த வேண்டும், ஏரி, குளம் உள்ளிட்ட நீர்நிலைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பது எப்படி என்று ஆலோசனை நடத்தப்பட்டது. நிர்வாகிகள் முத்துக்குமரன், சரவணன், கண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## நோய் தாக்கிய ஆடுகளுக்கு கால்நடைத்துறை சிகிச்சை

ஆர்.எஸ்.மங்கலம்: ஆர்.எஸ்.மங்கலம் அருகே நோய் தாக்குதலால் ஆடுகள் இறப்பதாக புகார் எழுந்தது. இதையடுத்து கால்நடைத்துறையினர் நோய் பாதித்த ஆடுகளுக்கு சிகிச்சை அளித்தனர். ஆர்.எஸ்.மங்கலம், பிச்சனார்கோட்டை, புல்லமடை, வல்லமடை உள்ளிட்ட பகுதிகளில் விவசாயத்திற்கு அடுத்தப்படியாக கால்நடை வளர்க்கப்படுகிறது. இப்பகுதியில் அதிகபடியாக வெள்ளாடு, செம்மறி ஆடுகள் வளர்க்கின்றனர். பிச்சனார்கோட்டை பகுதியில் மேய்ச்சல் சென்ற ஆடுகள் திடீரென இறந்தன. தொடர்ந்து ஆடுகள் இறந்ததால் விவசாயிகள் கவலையடைந்தனர். இதையடுத்து ஆர்.எஸ்.மங்கலம் கால்நடை டாக்டர் பிரபாகரன் தலைமையிலான மருத்துவ குழுவினர், பிச்சனார் கோட்டையில் முகாமிட்டனர். நோயால் பாதிக்கப்பட்ட ஆடுகளுக்கு சிகிச்சை அளித்தனர். கால்நடை டாக்டர் பிரபாகரன் கூறுகையில்," ஆடுகளுக்கு மர்ம நோய் எதுவும் தாக்கவில்லை. சேற்று புண் மற்றும் முட்கள் குத்தியதால் கால்கள் வீக்கமடைந்துள்ளன. தொடர்ந்து சிகிச்சை அளிக்கிறோம்," என்றார்.

## மலேசியாவில் மணக்குது சாயல்குடி பனை கருப்பட்டி

ராமநாதபுரம்; ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி, நரிப்பையூர், கன்னிராசபுரம், செவல்பட்டி, மாரியூர், காவிரிகுளம், மாயாகுளம் உள்ளிட்ட பகுதியில் பனைமரங்கள் அதிகளவில் உள்ளன. இங்கு பனையில் இருந்து எடுக்கப்படும் பதநீரில் கருப்பட்டி, கற்கண்டு தயாரிக்கப்படுகின்றன.

எந்த கலப்படமும் இல்லாமல் கருப்பட்டி தயாரிக்கப்படுகிறது. இதனால் மருத்துவ குணம் மிகுந்து இருக்கும். மேலும் புகையிலை பதப்படுத்துவதற்கும் பயன்படுத்தபடுகிறது. இங்கு தயாரிக்கப்படும் கருப்பட்டி மலேசியா மற்றும் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

தற்போது பனிக்காலம் துவங்கியதால் கருப்பட்டி வரத்து குறைந்துள்ளது. இதனால் விலை 10 கிலோ பெட்டிக்கு ரூ.400 வரை அதிகரித்துள்ளது. ஆயிரம் ரூபாய்க்கு விற்ற ஒரு பெட்டி ரூ.1,400 ஆக உயர்ந்துள்ளது.

வியாபாரிகள் கூறியதாவது: பனைக்கருப் பட்டியை அதிகளவில் உண்டாலும் சர்க்கரை நோய் அண்டாது. மார்ச் முதல் மே வரை ஒரு பனை மரத்தில் தினமும் 6 லிட்டர் பதநீர் கிடைக்கும். இதனால் அந்த சமயத்தில் கருப்பட்டி விலை குறைவாக இருக்கும். பத்து கிலோ கருப்பட்டி கிடைக்க 18 லிட்டர் பதநீரை காய்ச்ச வேண்டும். குளிர் காலம் துவங்கியுள்ளதால் ஒரு மரத்திற்கு ஒரு லிட்டருக்கும் குறைவாகவே பதநீர் கிடைக்கிறது. இதனால் கருப்பட்டி உற்பத்தி குறைந்ததால் விலை அதிகரித்துள்ளது, என்றனர்.

## இயற்கை உரத்தில் விளையும் கத்தரிக்காய்க்கு சுவை அதிகம்

கீழக்கரை;உத்தரகோசமங்கை அருகே களரி, சுமைதாங்கி, கீழச்சீத்தை உள்ளிட்ட பகுதிகளில் கத்தரிக்காய், சின்ன வெங்காயம், மல்லி, குண்டு மிளகாய் அதிகளவு சாகுபடி செய்ய பட்டுள்ளது. தற்போது இவை அறுவடையாகி வருகிறது. இவற்றில் சுமைதாங்கி கத்தரிக் காய்க்கு சுவை

அதிகம் என்பதால் வாடிக்கையாளர்களிடையே அமோக வரவேற்பை பெற்றுள்ளது. கத்தரிச் செடிகளுக்கு தழை, மாட்டு சாணம், வேப்பம் புண்ணாக்கு உள்ளிட்ட இயற்கை உரங்களை மட்டுமே இடுகின்றனர். சுமைதாங்கி விவசாயி கார்மேகம் கூறுகையில்,"" விவசாய நிலங்களில் ஆட்டுக்கிடை அமைத்த பின், நிலத்தை நன்கு உழுது மாட்டுச் சாணம், வேப்பம் புண்ணாக்கு, தழை, சாம்பல் ஆகிய இயற்கை உரங்களை நன்கு தூவி மக்கச் செய்வோம். குறிப்பிட்ட இடைவெளிக்கு பின் பயிர்களை சாகுபடி செய்வதால் அவை பூச்சி, நோய் தாக்குதல் இன்றி செழிப்பாக வளரும். இயற்கை உரங்களை மட்டுமே பயன்படுத்தி விளைவிக்கப்படும் கத்தரிக்காய் உள்ளிட்ட காய்கறிகள் எதுவாக இருந்தாலும் சுவை அதிகமாக இருக்கும்,"என்றார்.

**உச்சத்தில் இருந்த காய்கறி விலைவீழ்ச்சி:உள்ளூர் வரத்து அதிகரிப்பால்**

ராமநாதபுரம்;ராமநாதபுரத்தில் உச்சம் தொட்ட காய்கறி விலை உள்ளூர் வரத்து அதிகரிப்பால் வீழ்ச்சி அடைந்தது. ராமநாதபுரம் காய்கறி மார்க் கெட்டிற்கு திண்டுக்கல், ஓட்டன் சத்திரம், பழநி, கொடைக்கானல், மேட்டுப்பாளையம், மதுரை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து காய் கறிகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. லாரி வாடகை, ஏற்று, இறக்கு கூலி, கடை வாடகை ஆகிய செலவுகளை கணக்கிட்டு உள்ளூர் மார்க்கெட்டில் காய்கறி விலை நிர்ணயிக்கப் படுகிறது. முகூர்த்த நாட்களில் காய்கறி விலை உயரத்தில் செல்வது வழக்கம்.

இந்நிலையில் கடந்த 3 மாதங் களில் ஐயப்ப, முருக பக்தர்கள் விரதம் மேற் கொண்டதால் பன் மடங்கு உயர்ந்த காய்கறி விலை தற்போது கடும்வீழ்ச்சி கண் டுள்ளது. கிலோ ரூ.100 வரை எகிறிய கத்தரிக்காய் ரூ.25க்கு விற் பனை செய்யப்படுகிறது. இது போன்று ரூ.65க்கு விற்ற அவரைக் காய் ரூ.25, ரூ.62க்கு விற்ற தக்காளி ரூ.14, ரூ. 80க்கு விற்ற காரட் ரூ.48, ரூ.55க்கு விற்ற வெண்டைக்காய் ரூ.45, ரூ. 55க்கு விற்ற பீட்ரூட் ரூ. 34, ரூ.35க்கு விற்ற சவ் சவ் ரூ.18, ரூ.35க்கு விற்ற முள்ளங்கி ரூ. 22, ரூ. 52க்கு விற்ற வெங்காயம் ரூ.28, ரூ. 42க்கு விற்ற பெல்லாரி ரூ.


28, ரூ.150க்கு விற்ற பட்டர் பீன்ஸ் ரூ.120 என விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

காய்கறி வியாபாரி பாலாஜி கூறுகையில்," விரத நாட்கள் முடிவடைந்ததையடுத்து காய்கறி விலை கணிசமாக குறையத்துவங்கி உள்ளது. ஜன., 20க்கு பிறகு கடந்த 3 மாத விலையுடன் ஒப்பிடுகையில் இரு மடங்கு விலை வீழ்ச்சி யடைந்துள்ளது. சத்திரக்குடி, பாண்டியூர், பார்த்திபனூர், களரி, தென்னவனூர் பகுதிகளில் இருந்து கத்திரிக்காய் வரத்து அதிகரித் துள்ளதால் விலை குறைந்துள்ளது. மேலும் விலை குறையக் கூடும் என எதிர்பார்க்கிறோம்," என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## முட்டை விலை 15 காசு குறைப்பு



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் நேற்று முட்டையின் பண்ணை கொள்முதல் விலையை தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு 15 காசு குறைத்து முட்டையின் விலை 400 காசு என நிர்ணயித்துள்ளது. கடந்த

ஒரு வாரத்துக்கு மேலாக நாமக்கல்லில் முட்டையின் விலை 415 காசாக இருந்தது. ஆனால் 390 காசு, 380 என்ற அளவுக்கு தான் பண்ணையாளர்கள் விற்பனை செய்து வந்தனர்.

பண்ணையாளர்களுக்கு இடையே உள்ள தொழில் போட்டியை அறிந்து கொண்ட வியாபாரிகள் மேலும் விலையை குறைத்து வாங்கி சென்றனர். இதனால் முட்டை விற்பனையில் பெரும் குழப்பம் ஏற்பட்டது.இதையடுத்து தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர்கள் சங்க தலைவர் நல்லதம்பி தலைமையில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் தனி கூட்டம் நடத்தி ஒருங்கிணைப்பு குழு அறிவிக்கும் விலையில் இருந்து 20 காசு மட்டும் குறைத்து முட்டையை விற்பனை செய்யலாம் என முடிவு செய்தனர். இதையடுத்து முட்டை விலையை தேசிய ஒருங்கிணைப்பு குழு 15 காசு குறைத்துள்ளது.

## அடிப்படைக்கு உரமிடுவோம்

இந்தியா விவசாயம் சார்ந்த நாடு. விவசாயத் தொழிலில் சுமார் 50 சதவீதம் மக்கள் ஈடுபட்டுள்ளனர். நாட்டின் முன்னேற்றம் என்பது விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. விவசாய உற்பத்தி பொருள் ஏற்றுமதி ஆண்டுக்கு ரூ.2.57 லட்சம் கோடி அளவுக்கு உள்ளது. ஆனால், விவசாயிகள் வாழ்வில் முன்னேற்றம் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. நாட்டில் பல மாநிலங்களில் விவசாயிகள் தற்கொலை என்பது அன்றாட நிகழ்வாக இருக்கிறது. இதைக் தடுக்க வேண்டும் என்றால் விவசாய முன்னேற்றத்தில் அரசுகள் உண்மையான கவனம் செலுத்த வேண்டும். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அரசு திட்டத்தின்படி 2015க்குள் நமது நாட்டின் ஆண்டு உணவு உற்பத்தியை அப்போதைய நிலையில் இருந்து 210 மில்லியன் டன்னிலிருந்து 420 மில்லியன் டன்னாக அதிகரிக்க திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால், இந்த அளவுக்கு உணவு உற்பத்தியை எட்ட முடியவில்லை.

இதற்கு பல காரணங்கள் உள்ளன. விவசாயம் செய்யும் நிலத்தின் பரப்பு

குறைந்தது, போதுமான பாசன வசதி இல்லாதது என்று பட்டியல் நீள்கிறது. குறிப்பாக விவசாயிகள் விளைவிக்கக் கூடிய பொருள்களுக்கு கட்டுபடியாகக் கூடிய விலை கிடைக்கவில்லை இதனால், விவசாயத்தில் ஆர்வம் குறைந்து வாழ்வாதாரத்துக்கு மட்டுமே விவசாயம் செய்யும் நிலை கிராமங்களில் உள்ளது. இந்தநிலையில், பிரதமர் மோடி தனது வானொலி உரையில், "கடந்த மாதம் அறிமுகம் செய்யப்பட்ட பிரதமரின் பயிர் காப்பீடு திட்டம் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அடுத்த 2 ஆண்டில் பிரதமரின் வேளாண் காப்பீடு திட்டத்தில் 50 சதவீத விவசாயிகளை சேர்க்க வேண்டும்" என்று கூறியுள்ளார். பிரதமரின் இந்த திட்டம் பயன் அளிப்பதாக இருந்தாலும், விவசாயத்தை விட்டு வேறு வேலைவாய்ப்பைக் தேடி கிராமங்களிலிருந்து நகர் பகுதிக்கு குடியேறும் போக்கு அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ளது. இந்த நிலவரத்தை நகரின் மக்கள் தொகை பெருக்கத்தை வைத்து தெரிந்து கொள்ளலாம்.

விவசாயம் தொடர்ந்து சீரமிவைச் சந்தித்துக் கொண்டிருக்கும் நிலையில், அதை முன்னேற்ற வேண்டும் என்றால் ஒருங்கிணைந்த நடவடிக்கை தேவை. அதாவது, விவசாயத்துக்கு தேவையான பாசன வசதி, பயிர் விதைகள், உரங்கள் உள்பட விவசாய இடுபொருட்கள் குறைந்த விலையில் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். கரும்பு விவசாயிகள் கரும்புக்கு நியாயமான கொள்முதல் விலை கிடைக்காமலும் கரும்பு ஆலைகள் கோடிக்கணக்கில் நிலுவை தொகை வைத்திருப்பதையும் காணமுடிகிறது.

இதேபோல், நெல், கோதுமை விவசாயிகளும் கொள்முதல் விலையை அதிகரிக்க போராடுவதைக் காண முடிகிறது. விவசாய விளை பொருள்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைக்கச் செய்ய வேண்டும். இதுபோன்ற அடிப்படை தேவைகளை நிறைவு செய்யாமல் விவசாயத்தை முன்னேற்றுவது என்பது கானல் நீராகத்தான் இருக்கும். ஊர் நன்றாக இருந்தால் திருவிழா தானாகவே சிறப்பாகும். விவசாயத்தை வளர்த்தால் காப்பீட்டை அவர்களே பெற்றுக் கொள்வார்கள்.

**கண் நோய்களை குணமாக்கும் வாகை**




விஷத்தை முறிக்கும் தன்மை கொண்டதும், கண் எரிச்சல், மாலைக்கண் போன்ற கண் நோய்களை தீர்க்க கூடியதும், ஒவ்வாமைக்கு மருந்தாக விளங்குவதும், நெறிக்கட்டிகளை சரிசெய்ய கூடியதுமான வாகை மரத்தின் சிறப்புகள் பற்றி தெரியுமா?

.மருத்துவ குணங்களை கொண்ட வாகை, நிழல் தரும் மரமாக பயன்பட்டு வருகிறது. இதன் பூக்கள் மிகவும் அழகாக இருப்பதுடன் நல்ல மணமுடையது. வாகை மரத்தின் இலைகள், காய்கள், மரப்பட்டை, விதைகள் ஆகியவை பல்வேறு பயன்களை தருகிறது. வாகை இலைகளை பயன்படுத்தி கண் நோய்களுக்கான தேனீர் தயாரிக்கலாம்.

தேவையான பொருட்கள்: வாகை இலை, சீரகம், பனங்கற்கண்டு. ஒருபிடி வாகை இலையுடன், அரை ஸ்பூன் சீரகம், சிறிது பனங்கற்கண்டு சேர்த்து ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி குடித்தால் கண்கள் பலப்படும். பார்வை நன்றாக தெரியும். மாலைக்கண் நோய்க்கு மருந்தாகிறது. கண்களில் ஏற்படும் சிவப்பு தன்மை, நீர் வடிதல் பிரச்னைகள் சரியாகும்.வாகை இலைகளை கொண்டு கண் நோய்க்கான

மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம்.

ஒரு ஸ்பூன் விளக்கெண்ணெயில் வாகை இலைகளை வதக்கி எடுக்கவும். சூடு ஆறிய பின்னர் கண்களில் வைத்து துணியால் சிறிது நேரம் கட்டி வைத்தால் கண் வலி, வீக்கம் சரியாகும். கண் எரிச்சல் போகும். வாகை மரத்தின் பூக்களை பயன்படுத்தி விஷமுறிவுக்கான மருந்து தயாரிக்கலாம்.தேவையான பொருட்கள்: வாகை பூக்கள், மிளகு, தேன். ஒன்று அல்லது இரண்டு பூக்கள் எடுக்கவும். பூக்கள் கிடைக்கவில்லை என்றால் மொட்டுக்களை பயன்படுத்தலாம்.

இதனுடன் 10 மிளகை பொடி செய்து சேர்க்கவும். ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். வடிகட்டி எடுத்து தேன் சேர்த்து குடித்தால் கை, கால் குடைச்சல் சரியாகும். விஷம் முறியும். நாய், எலி, தேள், பாம்பு கடிக்கு மருந்தாகிறது. வாகை மரத்தின் விதைகளை பயன்படுத்தி நெறிக்கட்டிக்கான மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: விதைகள், மிளகு, பனங்கற்கண்டு. வாகை மரத்தின் காய்கள் பட்டையாக இருக்கும். இதனுள் இருக்கும் விதைகளை எடுத்துக் கொள்ளவும். 5 முதல் 10 விதைகள், 10 மிளகு சேர்த்து நசுக்கி எடுக்கவும்.

இதனுடன் ஒரு டம்ளர் நீர் விட்டு கொதிக்க வைக்கவும். வடிகட்டி தேன் அல்லது பனங்கற்கண்டுசேர்த்து குடித்தால் கழுத்து, தொடை பகுதிகளில் ஏற்படும் நெறிக்கட்டி சரியாகும். வாகை மரத்தின் விதைகள் நோய் எதிர்ப்பு சக்தி உடையது. நோய் நீக்கியாக பயன்படுகிறது. வீக்கத்தை கரைப்பதுடன் வலியை போக்குகிறது. மருத்துவ குணங்களை கொண்ட வாகை, ஒவ்வாமைக்கு மருந்தாகிறது. நெறிக்கட்டு மற்றும் அதனால் ஏற்படும் காய்ச்சலை குணப்படுத்துகிறது. ரத்த ஓட்டத்தை சீர்படுத்தி கொழுப்பை குறைக்கிறது. இதயத்துக்கு பலம் தரக்கூடியதாக உள்ளது.

## தோட்டக்கலைத் துறைசார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

கூடலூர். : கூடலூர் தோட்டக் கலைத்துறையின் சார்பில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் கடந்த மாதம் 27,2,8,29 ஆகிய தேதிகளில் சேலாகுன்னு, முள்ளன்வயல் மற்றும் கொரவயல் ஆகிய பகுதிகளில் விவசாயிகளுக்கு வெள்ளாடு வளர்ப்பு, கறவை மாடு வளர்ப்பு மற்றும் செலவில்லா இயற்கை பண்ணையம் மற்றும் துல்லிய பண்ணை பராமிப்பு அமைத்தல் குறித்து ஒரு நாள் பயிற்சிவழங்கப்பட்டது.

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் உதவி தொழில் நுட்ப மேலாளர் பாவைப்பிரியா வரவேற்புரை வழங்கினார். கூடலூர் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் ஷிபிலாமேரி தோட்டக்கலைத்துறையின் கீழ் செயல்படும் திட்டம் குறித்து விளக்கி பேசினார். கால்நடை துறையில் இருந்து முனைவர் பிரபு, வினோத் மற்றும் கால்நடை உதவி மருத்துவர்கள் ஆகியோர் வெள்ளாடு,கறவை மாடு வளர்ப்பில் அதற்கு அளிக்க வேண்டிய ஊட்டச்சத்து மற்றும் தீவனம் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. தோட்டக்கலை ஆராய்ச்சி உதவி பேராசிரியர் செலிவில்ல இயற்கை விவசாயம் மேற்கொள்வது குறித்து விளக்கி பேசினார். மேலும் மாட்டிலிருந்து கிடைக்கும் ஐந்து பொருட்களான சாணம், கோமியம், பால், தயிர்,நெய் ஆகியவை கொண்டு இயற்கை உரமான பஞ்சகவ்யா தயாரிப்பது பற்றியும், ஆடு, மாடு சாப்பிடாத இலை, தழைகளை வைத்து தசகவ்யா தயாரிப்பது மற்றும் டிரைக்கோடெர்மா,சூடோமோனாஸ் ஆகியவற்றின் முக்கியத்துவம் அதன் பயன்குறித்தும் விளக்கி பேசினார். இந்த பயிற்சி முகாமில் இயற்கை விவசாயம் குறித்தும் அதன்பயன் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## காளான் வளர்ப்புக்கு தோட்டக்கலைத்துறை சார்பில் 40% மானியம்

ஊட்டி, : தோட்டக்கலைத்துறை மூலம் காளான் வளர்ப்புக்கு 40 சதவீதம் மானியம் அளிக்கப்படுகிறது. இதனை பயன்படுத்தி காளான் வளர்ப்பில் ஈடுபட்டு பயன்பெற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்ட

தோடக்கலைத்துறை சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்க திட்டத்தின் கீழ் காய்கறி, வாசனை பயிர்கள், பயிர் விநியோகம் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் பழம் மற்றும் காய்கறி சாகுபடி செய்தல், இயந்திரமயமாக்குதல், பயிற்சி வழங்குதல் மற்றும் அறுவடைக்கு பின் நேர்த்தி செய்தல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக இந்த ஆண்டு ரூ.4 கோடியே 91 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்ட தோட்டக்கலைத்துறை மூலம் காளான் வளர்ப்புக்கு 40 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. நடப்பாண்டு நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரியில் பாண்டியன் பார்க் மற்றும் வெஸ்ட்புரூக் ஆகிய இரு இடங்களில் விவசாயிகள் காளான் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். பாண்டியன் பார்க் பகுதியில் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த பாலசுப்ரமணியம் ரூ.40 லட்சம் செலவில் காளான் வளர்ப்பு கூடம் அமைத்துள்ளார். இதனை மாவட்ட கலெக்டர் சங்கர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்விற்கு பின் மாவட்ட கலெக்டர் சங்கர் கூறுகையில்: நீலகிரி மாவட்டத்தில் காளான் உற்பத்தி செய்ய ஏற்ற காலநிலை உள்ளது. இதனால், காளான் உற்பத்தி அதிகரிக்க தேசிய தோட்டக்கலை வளர்ச்சி இயக்க திட்டத்தின் கீழ் காளான் உற்பத்தி கூடம் அமைக்க விவசாயிகளுக்கு 40 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. கோத்தகிரி வெஸ்ட்புரூக் பகுதியில் இந்த விவசாயிக்கு ரூ.16 லட்சம் மானியம் அளிக்கப்பட்டுள்ளது. சாகுபடி செலவு ஆகியவை போக ஆண்டுக்கு ரூ.15 லட்சம் வரை லாபம் கிடைக்கும். இந்தாண்டு இரு விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை மூலம் காளான் வளர்ப்பு திட்டம் மூலம் ரூ. 32 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதே போல் மலர் சாகுபடிக்கு பசுமை குடில் அமைக்க ஒரு சதுர மீட்டருக்கு ரூ.467.5 வழங்கப்படுகிறது. ஒரு விவசாயி அதிகபட்சமாக 4000 ஆயிரம் சதுர மீட்டர் பசுமை குடில் அமைக்கலாம். 4000 சதுர மீட்டருக்கு ரூ.16.8 லட்சம் மானியம் வழங்கப்படுகிறது. மலர் சாகுபடியின் கீழ் ஆசியட்டிக் மற்றும் ஓரியண்டல் லில்லி ஆகிய கொய்மலர் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. இந்த கொய்மலர் ஒன்றுக்கு ரூ.40 வரை விலை கிடைக்கிறது. மலர் சாகுபடியை தொழில்முறையில் செய்தால் விவசாயிகள் லாபம் பெறலாம். நடப்பாண்டில் நீலகிரி

மாவட்டத்தில் ரூ.3.26 ோகாடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் போது தோட்டக்கலை இணை இயக்குநர் மணி, உதவி இயக்குநர் உமாராணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கோடை சீசனை முன்னிட்டு ரோஜா செடி கவாத்து பணி 80% நிறைவு

ஊட்டி, : கோடை சீசனில் நடக்கும் ரோஜா கண்காட்சிக்கு பூங்காவை தயார்படுத்தும் வகையில், ஊட்டி ரோஜா பூங்காவில் உள்ள ரோஜா செடிகளை கவாத்து செய்யும் பணி துவக்கப்பட்டு 80 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊட்டி நகரம் தமிழகத்தில் புகழ்பெற்ற சுற்றுலா தளங்களில் ஒன்றாகும். இங்கு நிலவும் மிதமான சீதோசன நிலையை அனுபவிக்க ஏராளமான சுற்றுலா பயணிகள் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்து செல்கின்றனர். கோடை காலமான ஏப்ரல், மே மாதத்தில் ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரிக்கும். கோடையில் வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில் ஆண்டுதோறும் மலர் கண்காட்சி, ரோஜா கண்காட்சி, படகு அணிவகுப்பு மற்றும் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிக்கள் நடத்தப்படுகின்றன. கோடை விழா நிகழ்ச்சிகளில் ஒன்றாக ஊட்டி விஜயநகரம் பகுதியில் உள்ள ரோஜா பூங்காவில் ரோஜா கண்காட்சி நடத்தப்படுகிறது. தற்போது பூங்காவில் 4 ஆயிரம் வீரிய ரகங்களை கொண்ட 27 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரோஜா செடிகள் உள்ளன. மேலும் இந்த ரோஜா பூங்காவில் பாரம்பரிய ரோஜாக்களுக்கு என தனியாக இடம் உள்ளது. பாரம்பரிய ரோஜா பூங்காவில் உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாரம்பரியம்மிக்க ரோஜா செடிகள் நடவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. கோடை சீசன் சமயத்தில் ரோஜா கண்காட்சியை தயார்படுத்தும் வகையில் பூங்காவில் உள்ள ரோஜா மலர் செடிகளை கவாத்து செய்யும் பணிகள் கடந்த 13ம் தேதி துவங்கியது. பூங்கா முழுவதும் சுமார் 80 சதவீதம் ரோஜா செடிகள் கவாத்து செய்யப்பட்டுள்ளன. இவை விரைவாக துளிர்விடும் வகையில் வெட்டப்பட்ட பகுதியில் மருந்துகள் தெளிக்கப்பட்டு வருகிறது. கவாத்து செய்யப்பட்ட ரோஜா செடிகளுக்கு உரமிட்டு நாள்தோறும் தண்ணீர்

பாய்ச்சப்பட்டு வருகின்றன. இவை ஏப்ரல் மாதத்தில் பூக்க துவங்கிவிடும். ரோஜா கண்காட்சி சமயத்தில் ரோஜா மலர்கள் பூத்து குலுங்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**146 விவசாயிகளிடம் ரூ.1.58 கோடி வசூல்**

கும்பகோணம், : கும்பகோணம் பாரத ஸ்டேட் வங்கி பஜார் கிளையில் தஞ்சை மண்டல அலுவலகம் சார்பில் முப்பெரும் விழா நடைபெற்றது. இதில் சென்னை வட்டார தலைமை அலுவலகத்தின் முதன்மை மேலாளர் ரமேஷ்பாபு தலைமை வகித்து நலத்திட்ட உதவிகள் வழங்கியும், புதிய இகார்னர் கட்டிடத்தை திறந்து வைத்து பேசினார். விழாவில் சென்னை வட்டார பாரத ஸ்டேட் வங்கியின் பொது மேலாளர் ரவீந்திரநாத், திருச்சி மண்டல பொது மேலாளர் சிவக்குமார், தஞ்சை மண்டல மேலாளர் கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவில், கும்பகோணம், சுவாமிமலை மற்றும் திருவிடைமருதூர் அரசு மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள் மற்றும் விவசாயிகளுக்கான டிராக்டர் மற்றும் இதர விவசாய இயந்திரங்களுக்கான நீண்ட நாள் வாராக் கடன்களுக்கான சிறப்பு ஒரு முறை தீர்ப்பு திட்ட முகாம் நடைபெற்றது. சிறப்பு முகாமில் 10 பாரத ஸ்டேட் வங்கி கிளைகள் சார்பாக 146 விவசாயிகள் ரூ.1.58 கோடி செலுத்தி இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர். விழாவில் தஞ்சை மண்டல அலுவலகர்கள் கிளை மேலாளர்கள், களப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## 433 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு

நீடாமங்கலம், : சம்பா, தாளடி நெற்பயிர்களை சாகுபடி செய்ய திருவாரூர் மாவட்டத்தில் 433 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதாக கலெக்டர் மகிவாணன் தெரிவித்தார். திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் அருகே உள்ள சித்தாம்பூரில் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள சம்பா நெல் வயல்களை கலெக்டர் மதிவாணன் பார்வையிட்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: திருவாரூர் மாவட்டத்தில் இயல்பாக சம்பா 1,48,817 எக்டேர், தாளடி 27,525 எக்டேர் என மொத்தம் 1,36,342 எக்டேரில் சாகுபடி செய்யப்படும். நடப்பாண்டில் சம்பா 1,20,156 எக்டேர், தாளடி 28,688 எக்டேர் என

மொத்தம் 1,48,844 எக்ேடரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. வேளாண்மைதுறை அலுவலர்கள் சாகுபடி செய்யப்பட்டிருந்த சம்பா மற்றும் தாளடி பயிர்களை தொடர்ந்து கண்காணித்து அவ்வபோது ஏற்படும் பூச்சிநோய் தாக்குதலுக்கு தகுந்த பாதுகாப்பு முறை பற்றி தெரிவித்ததால் பூச்சிநோய் தாக்குதல் பெருமளவில் ஏற்படவில்லை. தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா பயிர்களும் அறுவடைக்கு தயாராகிவிட்டன. சம்பா மற்றும் தாளடி நெற்பயிரில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் இல்லை. இதற்கென வேளாண்மைத்துறை அலுவலர்கள் சிறப்பு கவனம் செலுத்தி கிராமம்தோறும் இயக்கங்கள் நடத்தி தற்சமயம் 90 சதம் சம்பா பயிர்கள் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த நெற்பயிர்கள் தொடர்ந்து அறுவடை செய்யப்பட்டு வருகிறது. சம்பா, தாளடி நெல்லை கொள்முதல் செய்ய மாவட்டத்தில் 433 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. இதை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்றார். வேளாண்மை இணை இயக்குனர் மயில்வாகணன், நீடாமங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் மீனா உடனிருந்தனர்.

**வருமானம் அதிகரிக்க விவசாயிகள் கேழ்வரகு பயிரிடலாம் வேளாண்துறை ஆலோசனை**

பழநி, : வருமானம் அதிகரிக்க கேழ்வரகு பயிரிடலாமென வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். கேழ்வரகு பயிரிட கோ 9, கோ (ரா) 14, கோ 15, பையூர் (ரா) 2 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். ஆடி மற்றும் புரட்டாசி ஆகியவை கேழ்வரகு ஏற்ற பருவங்களாகும். நிலத்தை 2 முறை நன்கு உழவு செய்த பின்பு 3வது உழவில் தொழு உரம் இடவேண்டும். பொட்டாசியம் டை ஹேட்ரஜன் பாஸ்பேட் 20 கிராமுடன் 1 லிட்டர் நீர் கலந்த கரைசலில் விதைகளை 6 மணி நேரம் ஊறவைத்து உலர்த்திய பின் விதைக்க வேண்டும். நாற்றாங்கால் பயிரிட ஹெக்டேருக்கு 5 கிலோ விதையளவும் நேரடி விதைப்பிற்கு 10 முதல் 15 கிலோ விதைளவு வேண்டும்.

18 முதல் 21 நாட்கள் வயதுடைய நாற்றுகளை குத்துக்கு 2 அல்லது 3 நாற்றுகள் வீதம் 15*15 சென்டி மீட்டர் இடைவெளியில் நடவு செய்யலாம். பரிந்துரைக்கப்பட்ட உர அளவான தழை, மணி, சாம்பல் சத்துக்களை ஹெக்டேருக்கு முறையே 90:45:45 கிலோ என்ற அளவில் இடவேண்டும். 2 கிலோ அசோஸ் பைரில்லம் மற்றும் 2 கிலோ பாஸ்போ பாக்டீரியத்தை மக்கிய தொழு உரத்துடன் கலந்து 1 ஹெக்டேர் நிலத்தில் பயிரிடலாம். விதைத்த 18ம் நாள் ஒரு களையும், 45வது நாள் மற்றொரு களையும் எடுக்க வேண்டும். 1 ஹெக்டேருக்கு 2 லிட்டர் பியூட்டாகுளோர் களைக்கொல்லியை 500 லிட்டர் தண்ணீருடன் கலந்து நாற்று நட்ட 3ம் நாள் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும்.

கேழ்வரகை பூச்சிகள் பெரும்பாலும் தாக்குவதில்லை. எனினும், பருவ மாற்றத்திற்கு ஏற்ப வெட்டுப்புழுக்கள், தண்டு துளைப்பான்கள், சாறு உறிஞ்சுகள், வேர் அசுவினி முதலிய பூச்சுகள் தாக்கலாம். வெட்டுப்புழுக்களை கட்டுப்படுத்த மாலத்தியான் 200 மில்லி தண்ணீரில் கலந்து கொள்ள வேண்டும். தண்டு துளைப்பான்களை கட்டுப்படுத்த தூர்கட்டும் பருவத்திலும், பூக்கும் பருவத்திலும் இப்பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்தலாம். வேர் அசுவினியை கட்டுப்படுத்த டைமித்தோயைட் 0.03% கலவையை வேர்ப்பகுதியில் ஊற்ற வேண்டும். கதிர்கள் நன்கு காய்ந்து ஊற்றிய பிறகு அறுவடை செய்ய வேண்டும். இதுதொடர்பான கூடுதல் தகவல்கள் விவசாயிகள் அந்தந்த பகுதி வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## தரிசு நிலங்களை கையாளும் முறை குறித்த விழிப்புணர்வு முகாம்

சின்னமனூர், : சின்னமனூர் அருகே, தரிசு நிலங்களை கையாளும் முறை குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது. சின்னமனூர் அருகே, துரைச்சாமிபுரத்தில் மத்திய அரசின் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சகம், திண்டுக்கல் அமைதி அறக்கட்டளை, ஆண்டிபட்டி டோரா அறக்கட்டளை ஆகியவை சார்பில், தேசிய

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம் நடந்தது. இயற்கை ஆர்வலர் பின்னியப்பன் தலைமை வகித்தார். டோரா அறக்கட்டளை இயக்குனர் வர்ணம் முன்னிலை வகித்தார். வி.எஸ்.டி இயக்குனர் முருகன் வரவேற்றார். முகாமில், நீர், நிலவளம் காப்பதன் அவசியம், அதனை காக்கும் முறை குறித்து விளக்கப்பட்டது.

தரிசு நிலத்தை வீணாக்காமல் கையாளும் முறை குறித்து தெரிவிக்கப்பட்டது. மரங்களை அழிப்பதால், இயற்கை வளம் குறைந்து, பூமி வெப்ப மயமாகிறது. நிலங்கள் பாலைவனமாக மாறுவதை தடுக்க, மரக்கன்றுகள் நட வேண்டும். மத்திய மாநில அரசுகள் கொண்டு வரும் திட்டங்கள் தடையின்றி சேர்வது குறித்து விளக்கப்பட்டது. மேலும், எரசை பகுதி சுண்ணாம்பு ஊற்றுக்காடு மானாவாரி நிலப்பகுதிக்கு சென்று செயல் முறை விளக்கம் அளிக்கப்பட்டது. கிரீன் நிறுவன இயக்குனர் போஸ், சமூக வள பயிற்றுநர்கள் முருகேஸ்வரி, ஆனந்தி, விஜஎஸ்டி இயக்குனர் பிச்சை மற்றும் பெண்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். பசுமை கலைக்குழு மூலம் கலை நிகழ்ச்சிகளும் நடந்தது. டோரா அறக்கட்டளை மேனேஜிங் டிரஸ்டி எஸ்தர்ராணி முகாமை ஏற்பாடு செய்திருந்தார்.

## விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

திருச்சுழி, : சிறுதானிய பயிர்களின் முக்கியம் குறித்து வேளாண்மை துறை அதிகாரிகள் மூலம் விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது.எம்.ரெட்டியபட்டி கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் 40 பேர் தேர்வு செய்யப்பட்டு ஒரு நாள் பயிற்சி நடைபெற்றது.வேளாண்மை உதவி இயக்குநர் நாச்சியாரம்மாள் சிறுதானியப் பயிர்களின் முக்கியத்துவம் சாகுபடி முறைகள் மற்றும் பொருளாதார நிலையில் சிறுதானிய பயிர்களின் பயன்பாடு பற்றி எடுத்துரைத்தார். சிறுதானிய பயிர்களில் நார்ச்சத்து மிகுதியாக உள்ளது. கொழுப்பு அளவை குறைக்க உதவி செய்கிறது. செரித்தலின் போது ரத்தத்தில் இருந்து குளுக்கோஸ் அளவை மெதுவாக வெளியிடுகிறது. இதய நோயாளிகள் மற்றும் சக்கரை

நோயாளிகளுக்கு நல்ல உணவாக பயன்படுகிறது. குறைவான மழையிலும் அதிக மகசூல் தருகிறது. விவசாயிகள் சிறுதானியப் பயிர்கள் சாகுபடி செய்ய முன் வர வேண்டும் என தெரிவித்தனர்.

அருப்புக்கோட்டை மண்டல ஆராய்ச்சி நிலையம் பூச்சியியல் துறை பேராசிரியர் முத்தையா சிறுதானிய பயிர்களில் காணப்படும் பூச்சி மற்றும் நோய்கள் அவற்றை கட்டுப்படுத்துவது குறித்து பேசினார். இதற்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் முத்துக்கருப்பன், உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் வீரபாண்டி, முனீஸ்வரி ஆகியோர் செய்திருந்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஊட்டி மத்திய மண்– நீர்வள ஆராய்ச்சி மையத்தில் கேரளா, ராஜஸ்தான் மாநில உதவி வன பாதுகாவலர்களுக்கு பயிற்சி




ஊட்டி,

ஊட்டியில் உள்ள மத்திய மண் மற்றும் நீர் வள ஆராய்ச்சி மையத்தில் கேரளா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களை சேர்ந்த உதவி வன பாதுகாவலர்களுக்கு பயிற்சி அளிக்கும் முகாம் நேற்று தொடங்கியது.

<u>கேரளா, ராஜஸ்தான்</u>

ஊட்டி தீட்டுக்கல் பகுதியில் மத்திய மண் மற்றும் நீர்வள ஆராய்ச்சி மையம் இயங்கி வருகிறது. இந்த மையம் சார்பில் கேரளா, ராஜஸ்தான்

ஆகிய மாநிலங்களை சேர்ந்த 34 உதவி வன பாதுகாவலர்களுக்கு வனப்பகுதிகளில் நீர் பிடிப்பு மேலண்மை பயிற்சி 12 நாட்கள் வழங்கப்பட உள்ளன. இதற்கான பயிற்சி முகாம் தொடக்க நிகழ்ச்சி மத்திய மண் மற்றும் நீர்வள ஆராய்ச்சி மையத்தில் நேற்று நடைபெற்றது. இதற்கு ஆராய்ச்சி மைய தலைவர் கோலா தலைமை தாங்கினார். மாவட்ட வன அதிகாரி பத்ரசாமி, வனக்கல்லூரி பேராசிரியர் இளங்கோ ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த பயிற்சி முகாமை முதுமலை புலிகள் காப்பக கள இயக்குனர் சீனிவாச ரெட்டி தொடங்கி வைத்து பேசியதாவது:–

<u>உயிரினங்கள்</u>

நீலகிரி மாவட்டம் வனத்துறை அதிகாரிகளுக்கு சிறந்த பயிற்சி அளிக்கும் மையமாக திகழ்கிறது. இங்கு பல்வேறு வகையான தாவரங்கள், உயிரினங்கள், நீர்நிலைகள் உள்ளிட்டவை உள்ளன. இங்குள்ள மத்திய அரசின் மண் மற்றும் நீர்வள ஆராய்ச்சி மையம் நாட்டில் உள்ள அனைத்து துறைகளையும் சேர்ந்த பல்வேறு அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்கி வருகிறது.

இங்கு அளிக்கப்படும் பயிற்சி மூலம் வனத்துறையினர் வனங்களை பாதுகாத்தல், மண் மற்றும் நீர்நிலைகளை அறிந்து கொள்ளுதல், நீர்நிலைகளை மாசுபடாமல் பாதுகாப்பது உள்ளிட்டவை குறித்து எளிதாக அறிந்து கொள்ளமுடியும். இதன் மூலம் உதவி வன பாதுகாவலர்கள் வனங்களை பாதுகாக்க முடியும்.

<u>மண் அரிப்பு</u>

இங்கு பயிற்சி எடுக்கும் அதிகாரிகள், பணியில் சேர்ந்த பின்பு தங்களுக்கு கீழ் உள்ள அதிகாரிகள் மற்றும் வனத்துறை ஊழியர்களுக்கு வனத்தை பாதுகாப்பது, மண் வளம் மற்றும் மண் அரிப்பை தடுக்கும் வழிமுறைகள் குறித்து பயிற்சி அளிக்க முடியும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த பயிற்சி முகாமில் ஆராய்ச்சி மைய விஞ்ஞானி டாக்டர் மணிவண்ணன், மழைநீர் சேகரிப்பு, வனப்பகுதியில் மழைநீர் வடிகால் கட்டமைப்பு, நீர்நிலைகளை பாதுகாக்க திட்ட மதிப்பீடு தயார் செய்வது குறித்து பயிற்சி அளித்தார். இதில் விஞ்ஞானிகள் டாக்டர் கண்ணன், கஸ்தூரி திலகம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.